

விருதுநகர் மாவட்டம் , சாத்தூர் நகராட்சியில் , மேலக்காந்தி நகர் தொடக்கப்பள்ளியில் மாநில நிதிக்குழு பள்ளி மேம்பாட்டு மானியம் 2023–2024 திட்டத்தின் கீழ் , ரூ .86 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய வகுப்பறைக் கட்டிடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில் , சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் முன்னிலையில் , வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் திறந்து வைத்தார் . உடன் சாத்தூர் ஒன்றிய திமுக செயலாளர் கடற்கரை ராஜ், நகர திமுக செயலாளர் குருசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மயிலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 1.61 கோடிரூபாய் மதிப்பீட்டில்

# கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் வீடு கட்டுவதற்கான பணி ஆணைகள்!

### செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. பயனாளிகளுக்கு வழங்கி பேச்சு!

மைலம், ஜூன் 27- இன்னுயிர் காப்போம் 48 திட்டத்தின் மூலம் பல லட்சம் உயிர்களை முதலமைச்சர் காப்பாற்றியுள்ளதாக மயிலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 1.61 கோடிரூபாய் மதிப்பீட்டில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் வீடு கட்டுவதற்கான பணி ஆணைகளை முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. பயனாளிகளுக்கு வழங்கி பேசினார்.

விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகள் மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஜன்மன் திட்டத்தில் வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமையில் வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்

முன்னாள் அமைச்சரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டுமயிலம் ஒன்றியத்தைச் சேர்ந்த ரெட்டணை, அவ்வையார்குப்பம், செ. கொத்தமங்கலம், நெடிமொழியனூர், பேரணி ,மயிலம், உள்ளிட்ட 19 ஊராட்சிகளை சேர்ந்த 41 பயனாளிகளுக்கு

1 கோடியே 45 லட்சத்தி79 ஆயிரத்து 600ரூபாய் மதிப்பீட்டில் கலைஞர்வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகளையும், 3 மலைவாழ் மக்களுக்கு 15 லட்சத்தி 30 ஆயிரம் மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான பணி அணைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பேசுகையில்:

ஆட்சி பொறுப்பேற்ற 4 ஆண்டு காலத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை எளிய மக்களின் நலன் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

அந்த வகையில் கலைஞரின் வழியில் ஆட்சியைநடத்திக் கொண்டிருக்கின்ற தளபதி அவர்கள் இன்னுயிர் காப்போம் 48 திட்டத்தின் மூலம் பல லட்சம் உயிர்களை காப்பாற்றியவர் முதலமைச்சர் என அவர் பெருமைப்பட தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி சேது நாதன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன், செழியன், ஒன்றிய துணைச் சேர்மன் புனிதா ராமஜெயம், மாவட்ட கவுன்சிலர்கள் விஜயன், மகேஸ்வரி குமரேசன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,ஒன்றிய கவுன்சிலர்கள் ராஜ் பரத், கண்ணன், சரசு முருகன், பரிதா சம்சுதீன்,தனலட்சுமி ஆறுமுகம், நிர்வாகிகள் வீடூர் ரவி, அன்சாரி, நெடி சுப்பிரமணியன், சேகர், ஞானசேகர் ,அன்பு சேகரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### போளூர் முரசொலி முகவர்

## சீனிவாசனின் சகோதரர் ந.ரமேஷ் மறைவு!



திருவண்ணாமலை, ஜூன் 27- திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம் வெண்மணி “வான் வாழ்” நடராஜன் காந்திமதி ஆகியோரின் மூத்த மகனும் க.அபிராமிசெல்வி அவர்களின் கணவரும், போளூர் முரசொலி முகவர் ந.சீனிவாசனின் சகோதரரமான ந.ரமேஷ் அவர்கள் (தினகரன் செய்தியாளர்) நேற்று முன்தினம் (25.6. 2025) இரவு 11.00 மணியளவில் இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதிச்சடங்கு நேற்று (26.06.2025) மாலை 4.00 மணி அளவில் வெண்மணியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.



விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில்ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர்செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டுமயிலம் ஒன்றியத்தைச் சேர்ந்த 41 பயனாளிகளுக்கு 1 கோடியே 45 லட்சத்தி79 ஆயிரத்து 600ரூபாய் மதிப்பீட்டில் கலைஞர்வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகளையும், 3 மலைவாழ் மக்களுக்கு 15 லட்சத்தி 30 ஆயிரம் மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான பணி ஆணைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், தலைமை தீர்மானம் குழு உறுப்பினர் செஞ்சி சிவா,ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன், செழியன்,துணைச் சேர்மன் புனிதா ராமஜெயம்,மாவட்ட கவுன்சிலர்கள் விஜயன்,மகேஸ்வரி குமரேசன்,வட்டார வளர்ச்சி அலுவலர் சிவகுமார் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அலமேலு அப்பாதுரை
### ஜூன் 27 (2001)



**தி.மு.க. மகளிர் அணிச் செயலாளராகவும் – தலைமை நிலையச் செயலாளராகவும் – தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் – சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**தி.மு.க. மகளிர் அணியினைச் சிறப்பாக கட்டிக் காப்பாற்றியவர்.**

**1938ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி திணிப்பு எதிர்ப்பு கிளர்ச்சியிலும், பின்னர் நடைபெற்ற கறுப்புக் கொடி போராட்டம், விலைவாசி உயர்வு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



## தி.மு.க.
## இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### தேனி தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.செல்வம் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தேனி தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 27.06.2025 | ஆண்டிப்பட்டி மேற்கு ஒன்றியம் | ரெங்கசமுத்திரம் | இரா.பாண்டியன்<br>எஸ்.வர்ஷினி |
| 2 | | உத்தமபாளையம் பேரூர் | தேரடி வீதி | கோம்பை எஸ்.கமாலுதீன்<br>இரா.கனிஷ்டா |
| 3 | 28.06.2025 | உத்தமபாளையம் கிழக்கு ஒன்றியம் | இராயப்பன்பட்டி ஊராட்சி | கோம்பை எஸ்.கமாலுதீன்<br>இரா.கனிஷ்டா |
| 4 | | கம்பம் ஒன்றியம் | சுருளிப்பட்டி ஊராட்சி | எம். ஜெயக்குமார்<br>ஜெ.சிந்துஜா |
| 5 | | ஆண்டிப்பட்டி கிழக்கு ஒன்றியம் | தெப்பம்பட்டி ஊராட்சி | இரா.பாண்டியன்<br>எஸ்.வர்ஷினி |
| 6 | 29.06.2025 | ஹைவேஸ் பேரூர் | வெண்ணியார் எஸ்டேட் | இ. நாகூர்கனி |
| 7 | | சின்னமனூர் நகரம் | ஓடைப்பட்டி ரோடு | இரா.பாண்டியன்<br>இரா.கனிஷ்டா |
| 8 | | கூடலூர் நகரம் | பழைய பேருந்து நிலையம், அண்ணா திடல். | கோம்பை எஸ்.கமாலுதீன்<br>ஜெ.சிந்துஜா |
| 9 | 30.06.2025 | கே.கே.பட்டி பேரூர் | ஈ.பி.ஆபீஸ் அருகில் | எம்.ஜெயக்குமார்<br>ஜெ.சிந்துஜா |
| 10 | | கம்பம் வடக்கு நகரம் | கலைஞர் நூலகம் அருகில் | இரா.பாண்டியன்<br>இ.நாகூர்கனி<br>எஸ்.முருகேசன் |
| 11 | | ஆண்டிப்பட்டி பேரூர் | சக்கம்பட்டி கல்கோவில் அருகில் | கோம்பை எஸ்.கமாலுதீன்<br>இரா.கனிஷ்டா |
| 12 | 01.07.2025 | க.புதுப்பட்டி பேரூர் | காந்தி சிலை அருகில் | இரா.பாண்டியன்<br>ஜெ.சிந்துஜா |
| 13 | | ஓடைப்பட்டி பேரூர் | பேருந்து நிருத்தம் அருகில் | கோம்பை எஸ்.கமாலுதீன்<br>இரா.கனிஷ்டா |
| 14 | 02.07.2025 | அனுமந்தன்பட்டி பேரூர் | வள்ளுவர் திடல் | கோம்பை எஸ்.கமாலுதீன்<br>ஜெ. சிந்துஜா |
| 15 | | சின்னமனூர் கிழக்கு ஒன்றியம் | முத்துலாபுரம் ஊராட்சி | இரா.பாண்டியன்<br>இரா.கனிஷ்டா |
| 16 | 03.07.2025 | கடைமயிலை தெற்கு ஒன்றியம் | வருசநாடு | கம்பம் செல்வேந்திரன்<br>எஸ்.வர்ஷினி |
| 17 | 04.07.2025 | கடைமயிலை வடக்கு ஒன்றியம் | மந்திசுனை மூலக்கடை ஊராட்சி | இரா.பாண்டியன்<br>இரா.கனிஷ்டா |
| 18 | 05.07.2025 | பண்ணைபுரம் பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | இரா.பாண்டியன்<br>இரா.கனிஷ்டா |
| 19 | | உத்தமபாளையம் மேற்கு ஒன்றியம் | டி.சிந்தலைச்சேரி பேருந்து நிறுத்தம் அருகில் | கோம்பை எஸ்.கமாலுதீன்<br>ஜெ. சிந்துஜா |
| 20 | 06.07.2025 | தேவாரம் பேரூர் | கடைவீதி | இரா.பாண்டியன்<br>இ.நாகூர்கனி |

**தேனி**

நாள் : 25.06.2025

கலைஞர் 100 1924 - 2023





கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கினங்க, விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர்.இரா.இலட்சுமணன் காணை கிழக்கு ஒன்றியம், கோனூர் ஊராட்சியில், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட புதிய கிராம நிர்வாக அலுவலக கட்டிடத்தை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மரக்கன்றுகளை வழங்கினார். உடன் கொத்தமங்கலம் B.சந்திரசேகர், சுந்தரமூர்த்தி, சிவக்குமார், தேவபூஷ்ணம் முருகன், ஜெயா குமரன், சிவசங்கர், கலைவாணி ரமணன், விமலா அறிவழகன், செல்வராஜ், செல்வம், ராஜேந்திரன், கோனூர் முருகதாஸ், காளிதாஸ், ஜெயக்கொடி, K.ராஜேந்திரன், தேவன், மணிகண்டன், மஞ்சு, அறிவழகன், குமரன், குமார் கார்த்தி, மண்ணாங்கட்டி, தெளி முருகன், அமுதா முருகன், வீரமணி, ராஜேந்திரன் மற்றும் ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.